RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s72

# கல்மரம் நாவலில் பெண்ணியச் சிந்தனை

**சு. ஏஞ்சல் ஜெயலலெட்ராணி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, புனித அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கன்னியாகுமரி-629157, தமிழ்நாடு, இந்தியா.

# Feminist Thought in ‘Kalmaram’ Novel

**S. Angel Jayalet Rani** [a, *]

[a] Department of Tamil, St. Alphonsa School of Arts & Science, Kanyakumari-629157, Tamil Nadu, India

* Corresponding Author: angelrani020@gmail.com

Received: 09-12-2021
Revised: 17-04-2022
Accepted: 19-04-2022
Published: 18-06-2022

Check for updates

**ABSTRACT**

The novel 'Kalmaram', written by writer Thilagavathi, won the Sahitya Akademi Award for the year 2005. In this novel, which is set to depict the living conditions of construction workers, Writer Thilagavathi sheds light on the plight of women in the society in the construction industry through female characters. Thoughts related to the woman in situations like gender equality, gender discrimination, women who are deceived by marriage, fighting for their rights, being convicted of the mistakes which have not been done, women of social concern, women who develop the knowledge of others, a society that sacrifices women by hiding the truth, innovative women, women who seek – give comfort, novelty women, and women who are capable of self-determination are pointed out. It expresses to the readers of the novel an understanding about women, self-confidence, social concern, and gender equality.

**Keywords:** Kalmaram, Feminism, Thilagavathi, Sahitya Akademi Award, Feminist Thought

## முன்னுரை

2005-ஆம் ஆண்டு சாகித்ய அகாதெமி விருது பெற்ற ‘கல்மரம்’ என்னும் புதினம் இக்கட்டுரையின் ஆய்வுப் பொருளாகின்றது. கட்டிடத் தொழிலாளர்களின் வாழ்க்கை அவலங்களையும், கட்டிட வேலை பார்க்கும் பெண்களின் வாழ்க்கை நிலையையும் எழுத்தாளர் திலகவதி அவர்கள் இந்நாவலில் திறம்பட எடுத்துரைத்துள்ளார் (Jeyanthi, 2006).

பெண்களை மையமாகக் கொண்டே கல்மரம் புதினம் படைக்கப்பட்டிருக்கிறது. கட்டிடத் தொழில் செய்வதால் பெண்களின் வாழ்வில் ஏற்படும் சிக்கல்கள் முதலாளிகளாலும், மேஸ்திரிகளாலும் நடத்தப்படும் நிலை அந்நிலையிலிருந்து மீள அவர்கள் செய்ய வேண்டுவன எவையெல்லாம்? கல்விகற்றப் பெண்கள் சமுதாயத்திற்குச் செய்ய வேண்டிய ஆற்ற வேண்டிய கடமைகள் கல்வியறிவுடையப் பெண்கள் எவ்வாறு செயல்பட வேண்டும்? என்பன குறித்து இந்நாவல் எழுதப்பட்டுள்ளது (Kedi, 2006).

## ஆண் - பெண் சமத்துவம்

வேலையின்றிச் சுற்றி அலையும் பையனுக்குப் பெண் பார்த்துத் திருமணம் முடிப்பதால் பையன் பொறுப்பாகிவிடுவான் என நினைத்து ஆதிலட்சுமி தன் மகன் காசிக்கு பெண்பார்த்துத் திருமணம் முடிக்கிறாள். உடனே ஆதிலட்சுமி ஆம்பளபோய் தண்ணி புடிச்சாரதா எனச் சீறி கண்டபடி திட்டுகிறாள்.

ஆணென்றால் வீட்டு வேலைகளைச் செய்யக் கூடாது. அவனது சுய கவுரவம் கெட்டு விடும் என்று நினைக்கும் பழக்கம் மாற வேண்டும். பெண்ணைப் போன்று ஆணுக்கும் வீட்டுவேலைகள் பகிர்ந்து கொடுக்கப்பட வேண்டும்.

வேலையின்றி ஊதாரியாகச் சுற்றித் திரியும் தன் மகனான காசியை மட்டும் இட்லிக்கார சின்னத்தாயிடம் சுடச்சுட இட்லி சாப்பிடச் சொல்கிறாள். ஆனால் வீட்டிற்காக உழைக்கும் காவேரிக்கு மட்டும் பழைய சோறும் வெங்காயமும் கொடுக்கப்படுகிறது. ஆண்மகன் என்றால் ஒரு விதமான உபசரிப்பு தாய்மார்களால் செய்யப்படுகிறது. ஆணும் பெண்ணும் சமம். பெண் பிள்ளைகளுக்கும் சுயமரியாதையும் உணர்வுகளும் உண்டென்பதை உணர்ந்து ஆண்களுக்குச் சமமாகப் பெண்கள் நடத்தப்பட வேண்டும் (Thilagavathi, 2005).

## ஆண் - பெண் வேறுபாடு

நாவலில் தாயாக வரும் ஆதிலெட்சுமிக்கு மகன் மீதுதான் பரிவு, இரக்கம் காசி வேலையில் இருப்பதாகப் பொய்ச் சொல்லி திருமணம் செய்து வைக்கிறாள். மருமகளாக, காசிக்கு மனைவியாக வருகிற ராகினி நெஞ்சில் ஏராளமானக் கனவுகளுடன் புகுந்த வீட்டிற்கு வருகிறாள். அங்கு அவளின் கனவுகள் அனைத்தும் ஏமாற்றங்களாக மாறுகின்றன. இதனால் விரக்திக்குச் சென்ற ராகினி தன் கணவனை எதிர்க் கேள்வி கேட்கிறாள்.

திருமணம் என்ற பெயரில் பெண்களை ஏமாற்றும் பெண்கள் மாற வேண்டும். பெண்ணைப் பெண்ணே ஏமாற்றுவது நாம் வேதனைப்பட வேண்டிய செயல், கணவன் வேலை வெட்டி இல்லாதவன் என்பதைத் தெரிந்ததும், குடும்பம் நடத்தப் பொருளுக்காக, கணவனுக்கு வேலை வேண்டும் என்று நினைக்கிறாள். தன் அண்ணனிடம் சொல்லி அவனுக்கு வேலை ஏற்பாடு செய்கிறாள். தானும் வேலைக்குச் செல்கிறாள். அறிவுப்பூர்வமாகவும், தைரியமாகவம் செயல்படுகிறாள். எங்கே மனைவி தன்னை மதிக்காமல் போய்விடுவாளோ என்று நினைத்து வார்த்தைகளால் அவளைக் காயப்படுத்துகிறான்.

எங்கே அவள் தன்னை மிஞ்சி விடுவாளோ என்ற கலக்கம் அவனிடம் காணப்படுகிறது. ஆண்கள் இவ்வெண்ணத்தை மாற்ற வேண்டும். அவர்களும் தங்களுக்கு இணையானவர்கள், சமமானவர்கள் என்ற எண்ணத்தைக் கொள்ள வேண்டும். இருவரின் நிலையும் உயர்த்தப்பட்டால்தான் சமுதாயம் உயரும் என்பதை உணர வேண்டும். தங்கள் மீது ஆண்கள் கொண்டிருக்கும் இவ்வெண்ணத்தைப் போக்கப் பெண்களும் முயற்சி செய்ய வேண்டும். ஆண்களுக்கு இவ்வெண்ணம் ஏற்படும் வகையில் பெண்களும் நடந்து கொள்ளக் கூடாது.

## திருமணத்தின் மூலம் ஏமாந்தப் பெண்கள்

பெண்ணைத் திருமணம் செய்து கொடுக்கும் பெற்றோர் மாப்பிள்ளை வீட்டாரின் நிலைமை மற்றும் புகுந்த வீட்டில் நடந்து கொள்ளும் விதம் போன்றவற்றைப் பக்குவமாகச் சொல்லிக்கொடுத்து எப்படி நடக்க வேண்டும் என்பது குறித்துக் கூற வேண்டும். பெண்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும்.

தன் கணவனின் நிலை, குடும்பநிலை போன்றவற்றை உணர்ந்து தன்னம்பிக்கையோடு வாழும் ராகினி போன்ற பெண்கள் உலகிற்குத் தேவை. தன் கனவுகள் ஏமாற்றப்படும்போது துவண்டு போகாமல் எதிர் நீச்சல் போடும் மனப்பக்குவம் பெண்களுக்குத் தேவை.

கட்டிட வேலை நடக்கும் இடத்தில் காசி காவலாளியாகவும், ராகினி கணக்குப்பார்ப்பவளாகவும் வேலை செய்கின்றனர். இரும்பு மற்றும் சிமெண்ட் இறக்கும் லாரிக்காரன் அதில் மோசடி செய்யும் போது அதைத் தன் அறிவால் நூதனமாகக் கண்டுபிடித்து முதலாளிக்குத் தெரியப்படுத்துகிறாள். அநியாத்தைக் தட்டிக் கேட்கும் குணம் பெண்களுக்கு வேண்டும். அக்கிரமத்தைக் கண்டு அடங்கிப் போகக் கூடாது. ராகினியின் இக்குணம் போற்றுதற்குரியது (Thilagavathi, 2017).

## உரிமைக்காகப் போராடுதல்

தலைமைப் பொறுப்பில் இருக்கும் பெண்கள் சகதொழிலாளர்களிடமும் பரிவு காட்ட வேண்டும். அவர்களுக்கு ஒரு துன்பமென்றால் உதவும் மனப்பக்குவம் கொண்டிருக்க வேண்டும். கொத்துக்கரண்டி பட்டதால் கால் விரல் துண்டித்துப் போன கம்சலைக்காக அவள் முதலாளியிடம் பரிந்து பேசுவதும், உதவி செய்யத் துடிப்பதும் சிறந்த பண்பு. இப்பண்பு ஒவ்வொரு பெண்ணுக்கும் இருக்க வேண்டும்.

வேலைவெட்டி இல்லாமல் ஊர் எல்லையில் அமர்ந்து வெட்டிப்பேச்சுப் பேசும் வாலிபர்களை ஆப்பம் மற்றும் இட்லி வியாபாரம் செய்யும் சின்னத்தாயி எதிர்த்துக் கேட்கிறாள். வீணாகப் பேசுவதை விட்டுவிட்டுச் சமுதாயத்திற்கு உருப்படியான செயல்களைச் செய்ய வலியுறுத்துகிறாள். இவ்வாறு சமுதாய அக்கறையுள்ளப் பெண்கள் தோன்ற வேண்டும். சமுதாய நலனில் பெண்களுக்கு அக்கறை தோன்ற வேண்டும்.

## செய்யாத தவறுக்குக் குற்றவாளியாதல்

ஆதிலட்சுமி தன் மூத்த மகளான கன்னியம்மாளை முன்பின் விசாரிக்காமல் குமாருக்குத் திருமணம் செய்து கொடுக்கிறாள். குடிப்பழக்கம் மற்றும் கெட்ட நடத்தை உடையவன் அவன், அவனது நடத்தையால் வெளியில் சொல்ல முடியாத நோய் ஏற்படுகிறது. இதையறிந்து மனைவியான கன்னியம்மாள் கேட்கும் போது அவளை அடித்து உதைக்கிறான். அத்தோடு அவள்தான் நடத்தை கெட்டவள். அவளால் தான் தனக்கு இந்நோய் ஏற்பட்டது என்று கூறி அவளைத் துன்புறுத்துகிறான். ஆண் செய்த தவறுக்குப் பெண்ணாகிய கன்னியம்மாள் துன்புறுத்தப்படுகிறாள்.

இதை எதிர்த்து நிற்கத் துணிவில்லாமல் கன்னியம்மாள் தன் தாய் வீட்டிற்கே வந்து விடுகிறாள். வயிற்றில் குழந்தையோடு சித்தாள் வேலைக்குச் செல்கிறாள். இப்படிப்பட்டப் பெண்களைப் பக்குவப்படுத்துவதற்குப் பெண்களும், சமூக அமைப்புகளும் முன்வர வேண்டும். என்ன செய்தாலும் அவள் அடங்கிவிடுவாள் என்ற ஆணவப் போக்கை மாற்றியமைக்க வேண்டும் (Thilagavathi, 2005).

## சமூக அக்கறையுள்ளப் பெண்கள்

கட்டிடத் தொழிலாளர்களின் வாழ்க்கையைக் குறித்து ஆய்வு செய்ய வரும் சுசீலா அவர்களின் வாழ்வு மேம்பட வேண்டுமென்று உழைக்கிறாள். விழிப்புணர்வு இல்லாமல் மேஸ்திரிகளுக்கும், ஓனர்களுக்கும் அடிமையாய் வாழும் சித்தாள் வேலை செய்யும் ஏழைப் பெண்களிடையே முதலில் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டுமென்று நினைக்கிறாள்.

கட்டிடத் தொழிலாளர்கள் வசிக்கும் பகுதியில் சாலையில் ஏற்பட்டப் பள்ளத்தில் தண்ணீர்த் தேங்கிக் கொசு உற்பத்தியாகி சுகாதாரக் கேடு ஏற்படுகிறது. தெருவாசிகள் எல்லோரும் அரசு சரிப்படுத்தட்டும் என்ற நினைப்பில் அதை விட்டுவிடுகின்றனர். ஆனால் 'சுசீலாவோ' கட்டிடத் தொழில் முதலாளிகளிடமும், வேலை செய்யும் தொழிலாளிகளிடமும் பேசி சிறிதாக மண், சிமெண்ட் என்று சேகரித்து, அவர்களின் மனதில் சுகாதாரத்தைக் குறித்து பக்குவமாக எடுத்துக் கூறுகிறாள். பின்பு அவர்களைக் கொண்டே அப்பள்ளத்தை மூடச் செய்து சீர்ப்படுத்துகிறாள். இப்படிப்பட்டத் துணிச்சலான, தைரியமான சமுதாய அக்கறையுள்ளப் பெண்கள் சமூகத்தில் தோன்ற வேண்டும் கல்வி கற்றுவிட்டு வேலை, நாகரிகம் என்ற பெயரில் பொழுதைக் கழிக்காமல், பிறருக்கு நன்மையைத் தரும்படியான செயல்களைச் செய்ய முன்வர வேண்டும் (Thilagavathi, 2017).

"சுசீலா எம்.ஏ. படித்தாள். அதற்குப் பிறகு டாக்டர் பட்டத்துக்கான ஆய்வுக்குத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டாள். அந்த ஆய்வுக்காக அவள் எடுத்துக்கொண்ட தலைப்புத்தான் 'கட்டிடத் தொழிலாளர் பிரச்சனை' இரண்டு மாதங்கள் வீடியோவிலும் கேமிராவிலும் தொழிலாளர்கள் உருவங்களைப் படம் பிடித்து அவர்களுடைய பேச்சுக்களைக் கையோடு டேப் ரிக்கார்டர்களில் பதிவு செய்து கொண்டு போய், ஆங்கில மேற்கோள்களை அங்கும் இங்கும் போட்டு, போட்டோ லேசர் பிரிண்டில் ஒரு காகிதத் தலகாணியைத் தயாரித்து அதற்கு ஒரு வெல்வெட் உறையும் போட்டு

பல்கலைக் கழகத்துக்குத் தந்து, அவள் ஒரு 'டாக்டராக' வலம் வந்திருக்கலாம். அதைக்காட்டி, அவள் நாலு இலக்கம் சம்பளம் பெறுகிற ஒரு உத்தியோகத்தில் உடனே சேர்ந்து, நகப்பூச்சு குலையாத நளின வாழ்க்கையை மேற்கொண்டிருக்கலாம்". என்னும் வரிகள் கல்வியானது எப்படி அமைய வேண்டும்? எப்படிப்பட்ட கல்வியைத் தேர்ந்தெடுக்கப் பெண்கள் முன்வர வேண்டும்? என்பதைப் பெண் சமுதாயத்திற்கு எடுத்துரைக்கிறார் (Thilagavathi, 2005).

பெண்கள் இருளில் மூழ்கிக் கிடக்கும் மக்களின் உள்ளங்களில் ஒளியேற்ற முயற்சிக்க வேண்டும். கட்டிடத் தொழிலாளர்கள் தங்கள் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு வேலை செய்கிறார்கள். கட்டி முடித்த பிறகு ஆரம்பத்தில் உழைத்தவனின் உழைப்பே காணாமல் போய் விடுகிறது. முதலாளிகளின் அதாவது, அதற்குமுதல் போட்டவனின் பெயரையே பறைசாற்றுகின்றன. இவ்வுண்மையால் கவரப்பட்ட சுசீலா அவர்களின் பிரச்சனைகளைச் சொல்லி பட்டம் பெறுவதைவிட அந்தப் பிரச்சனைகளை அவர்களோடு பகிர்ந்து கொள்ளவும், அதைத் தீர்ப்பதிலும் தன் அறிவைப் பயன்படுத்துகிறாள். அதில் வெற்றியும் பெறுகிறாள். ஒரு சமுதாயமே அவளால் விழிப்புணர்வு பெற்று வெளிச்சத்திற்கு வருகிறது.

## பிறர் அறிவை வளர்த்தல்

அறியாமையால் மூழ்கிக் கிடக்கும் மக்களின் உள்ளங்களில் ஒளியேற்றும் விதமாகச் செயல்படுகிறாள் சுசீலா, கண்மூடித்தனமான பழங்கால நம்பிக்கைகளையும், கொள்கைகளையும் குழிதோண்டிப் புதைத்துவிட்டு நிகழ்காலத்திற்கு ஒளியேற்றும் சிந்தனைகளை மக்கள் கொள்ள வேண்டும் என்பதை,

"கோபுரத்து விளக்கு பார்வைக்கு அழகாக இருக்கலாம் காவேர், ஆனா அதுக்குன்னு இருக்கிற எண்ணெய், திரி, எலெக்டிரிசிடி எல்லாத்தையும் கொண்டு போய் கோபுர விளக்குக்கு மட்டுமே கொட்டிட முடியுமா? நிஜத்தச் சொன்னா, அங்கே இருக்கிற சுடரவிட குடிசைக்குள்ளே எரியற விளக்கும், அடுப்புக்குள்ளே எரியற நெருப்பும்தான் மனுஷனுடைய வாழ்க்கைக்கு ரொம்ப உபயோகமா இருக்குது? அதென்னவோ தெரியலை நம்ப ஜனங்களுக்கு உபயோகமில்லாததையெல்லாம் தலையில் தூக்கி வச்சிகிட்டு கொண்டாடதே வழக்கமாகப் போச்சு". என்னும் வரிகளில் வெளிப்படுத்துகிறார் ஆசிரியர் இவ்வாறு சுசீலா பேசும் வார்த்தைகள், அதைக்கேட்டுக் கொண்டிருக்கும் காவேரியின் உள்ளத்திலும் முற்போக்குச் சிந்தனையை ஏற்படுத்துகிறது. தன் தாயிடம் குடும்பத்தின் வறுமை நிலையைப் போக்க பெண் கொத்தனராகப் போகிறேன் என்று பேசும் வார்த்தைகளில் ஆணுக்குப் பெண் சளைத்தவளல்ல என்றும் கருத்து வெளிப்படுகிறது (Thilagavathi, 2005).

## உண்மையை மறைத்து பெண்ணைப் பலியாக்குதல்

காசி குடித்துவிட்டு வீட்டுக்கு வருகிறான். இதையறிந்த ஆதிலட்சுமி அவளைக் கடிந்து கொள்கிறாள். இதையறிந்த சின்னத்தாயி இந்த விசயத்தை நாலு பேருக்குத் தெரியாமல் மூடி மறைக்கச் சொல்கிறாள். பெண் வீட்டாருக்கு இந்த விசயம் தெரிந்தால் திருமணத்தை நிறுத்தி விடுவார்கள் என்று நினைக்கிறாள். ஒரு பெண் கிடைக்க வேண்டுமென்பதற்காக அந்தப் பெண் திருமணம் என்ற பெயரில் ஏமாற்றப்படுகிறாள். அதைப் பெண்ணும் பெண் வீட்டாரும் சகித்துக் கொள்ள வேண்டும் இந்த நிலை சமுதாயத்திலிருந்து மாற்றப்பட வேண்டும். இப்படிப்பட்ட ஆண்களுக்கும் அதற்குத் துணைபோகிற பெண்களுக்கும் தகுந்த பாடம் புகட்ட வேண்டும்.

## புதுமைப் பெண்கள்

பெண்கள் தாங்கள் வாழும் இருண்ட சமுதாயத்தை விட்டு விட்டு வெளியே வரவேண்டும். அவர்களின் முன்னேற்றத்திற்காகச் செயல்படுகிற காரியங்களில் ஈடுபாடு காட்ட வேண்டும்.

"இதப்பாரும்மா. இந்தக் காவேரிய நீ என்னான்னு நெனச்சே? சுசீலாக்கா புதுசா ஒரு ஆபீஸ்க்குப் போறாங்கம்மா. ம்… எப்படிக் சொல்றது. ஆபீஸ் இல்லம்மா பள்ளிக்கூடம் மாதிரின்னு வச்சுக்கயேன். அதும் பேரு கூட சொல்லிச்சே. என்னாது ஆமா. கட்டடத் தொழிலாளரு மய்யம். அதுல சேரப் போறேன். பாரு". (திலகவதி 2005) என்று காவேரி பேசுவதிலிருந்து பெண் சமுதாயம் எவ்வாறு மாற வேண்டுமென்மதை உலகிற்கு எடுத்துக்காட்டுகிறார் ஆசிரியர்.

## மன ஆறுதல்

கன்னியம்மாளிடம் அன்பாகவும் ஆதரவாகவும் நடக்கும் ஜீவன் அவள் வீட்டு நாயான வெள்ளையன். அவளைப் பார்த்ததும் பாசத்தால் முனகுவதும் நக்குவதுமாக அவளைச் சீண்டும் நாயின் செயலால் தன் மீது அன்பும் பரிவும் காட்டப்பட வேண்டிய கணவனின் நினைவு வருகிறது அவளுக்கு. அவன் குணத்தை நினைத்து வருந்துகிறாள்.

"நான் மனம் சோர்ந்து போனதைப் பார்த்தால் இந்த நாய் எத்தினி ஆதரவாய் நடக்குது. இதுக்கு எம்மேல எத்தினி பிரியம். இதுல ஒரு சொட்டாவது அந்த மனுஷனுக்கு எம்மேல உண்டா? கன்னியம்மாள் தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள். பிரியமில்லாட்டிப் போவுது. தன்னைப் போல ஒரு உசுருன்னாவது அது என்னைப்பத்தி நெனச்சிங்கிதா? அதிகாரம் என்னா? பேசிக்கினு இருக்க சொல்லவே பட்டுப்பட்டுன்னு அடிச்சு நொறுக்குமே. அழுதுக்கினு அந்த எடத்த விட்டு எழுந்து போய் மறவா நின்னுக்குவேன். அப்பவும் உடாது. அங்க வந்து கையப்புடிச்சி முறுக்கும். என்னாடி ரொம்பத்தான் பிகு பண்ணறே சும்மா ரெண்டு தட்டு தட்னேன். அதுக்கே இந்த மாய்மாலம் போடறே. ஆம்பளன்னு இருந்தா பொண்டாட்டிக்காரிய அடிக்காதவேவா இருப்பாங்க? இப்பேர்பட்ட மனுசனுக்கு அத்தினி அவசரமா கட்டிக் குடுத்துச்சே அம்மா அதச் சொல்லணும். உடம்ப வலிக்கிறாப்பல அடிக்கறதும் கை கால் வீங்கி கன்னி போறாப்பல உதக்கறதும் வண்டவண்டாய்ப் பேசறதும் மொரட்டுத்தனமாய் பாயில தள்ளி உருட்டுறதும் கிழிஞ்சுப்போன அந்தப் பாயைத் தடவிக்கிட்டே அழுதுகினு கெடப்பேன். ஏண்டி அழுவறேன்னு ஆசையா பாசமா ஒரு வார்த்தை கேக்காது. பொண்டாட்டி கையில தன்மையா பேசி கொஞ்சிக்கினுக்கிற பொட்ட இல்லமே நானூங்கும். என்கிட்ட ஆதரவா பாசமா இருக்கிறது தப்புன்னு அது நெனக்கும் போலக்கிது". என்ற கன்னியம்மாளின் ஏக்கப் பேச்சிலிருந்து ஆணால் பெண்ணுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் சமூகத்திற்குக் காட்டப்படுகின்றன. இக்கொடுமைகளைப் பெண்கள் மௌனமாகச் சகித்துக் கொண்டிருந்த காலங்கள் அழிந்தன என்று சொல்லுமளவிற்குப் பெண்கள் அதை எதிர்த்துப் போராடப் பழகிக்கொள்ள வேண்டும் என்னும் கத்துக்களைப் பெண் சமூகத்திற்கு ஆசிரியர் வெளிக்காட்டுகிறார் (Thilagavathi, 2005).

## புதுமை விரும்புதல்

பழமை பழமை என்று சொல்லிக் கொண்டு பெண்களைப் பூட்டி வைக்கும் எண்ணம் மாற வேண்டும். உலகம் நாகரிகம் என்ற வளர்ச்சிப் பாதையை நோக்கிச் சென்று கொண்டிருக்கும்போது பெண்கள் மட்டும் மாறக்கூடாது: மாற்றம் தேவையில்லை என்று கூறுவது முட்டாள்தனமானது. காலத்திற்கேற்ப அவர்களையும் மாறச் செய்ய வேண்டும். பெற்றோர்களும் இம்மாற்றத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

"பின்பக்கம் சென்றவள் எதிரே அவசர அவசரமாக வந்து கொண்டிருந்த காவேரியைப் பார்த்து நின்றாள். அந்தப் பகுதியில் வாழ்கிற பெண்களைவிட உருவத்திலும், நடை, உடை பாவனைகளிலும் காவேரி இப்போதெல்லாம் நிறையவே வேறுபட்டுத்தானிருந்தாள். தலைமுடியை இரட்டைப் பின்னலாகப் பின்னிச் சுத்தமான பாவாடை தாவணி அணிந்திருந்தாள். சும்மா இருக்கிற நேரத்தில் எதையாவது படித்துக்கொண்டிருந்தாள். இவையெல்லாம் ஆதிலட்சுமிக்கு மனதினுள்ளே பெருமையும் சந்தோஷமும் அளித்த விஷயங்கள்". என்று ஆதிலட்சுமி கூறும் காவேரியின் தோற்றத்தின் வாயிலாகப் பெண்களின் மாற்றம் பற்றிய கருத்துக்களையும் அதை ஏற்கும் சமுதாயத்தையும் வெளிப்படுத்துகிறார்

ஆசிரியர் (Thilagavathi, 2005). இம்மாற்றத்திற்கு வித்திட்ட சசீலாவைப் போன்று ஒவ்வொரு பெண்ணும் செயல்பட வேண்டும் என்ற பெண்ணியக்கருத்தை நம்முன் வைக்கிறார் ஆசிரியர்.

## முடிவுரை

கட்டடத் தொழில் செய்யும் இடத்தில் தொழிலாளர்களை அடக்குகிற அடிமைப்படுத்துகிற முதலாளிகளை எதிர்க்கும் நோக்கில் அங்குள்ள பெண் தொழிலாளர்கள் அனைவரும் கட்டடத் தொழிலாளர்கள் சங்கத்தில் சேர்கின்றனர். அதன் மூலம் கிடைத்த வழிகாட்டுதலிலும் விழிப்புணர்விலும் அவர்கள் தைரியமுள்ளவர்களாக மாற்றப்படுகிறார்கள். தங்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்கெதிராக போர்க்கொடி உயர்த்தி அதில் வெற்றியும் பெறுகிறார்கள். இவ்வாறு பெண்கள் தங்கள் பிரச்சனைகளுக்கு தாங்களே சிந்தித்து ஒரு முடிவு எடுக்க வேண்டும். அடங்கி ஒடுங்கிப்போன காலங்கள் கழிந்தன என்ற எண்ணத்தை உலகத்துக்கு ஏற்படச் செய்ய வேண்டும். இவ்வாறு திலகவதி அவர்கள் பெண்ணியம் குறித்த கருத்துக்களை கல்மரம் நாவல் வழியாக வெளிப்படுத்துகிறார்.

## References


Jeyanthi, S., (2006) Kalmaram writer Thilagavathi, Thinnai, Accessd from: http://old.thinnai.com/?p=60606304

Kedi S., (2006) Sahitya Akademi Award Winner Thilagavathi IPS, Thendral, 6 (4).

Thilagavathi, (2005) Kalmaram, Amrudha Pathippagam, Chennai, India

Thilagavathi, (2010) Kalmaram (Sahitya akademi award winning Book), Amrudha Pathippagam, Chennai, India

Thilagavathi, (2017) Kalmaram, Amrudha Pathippagam, Chennai, India



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License